சொத்துவிவரங்களைப் பார்த்து அந்தத் தகவலை பெற்றுக்கொள்ளும்படியோ அல்லது சொத்து மதிப்பு எவ்வளவு என்பதை வருவாய் ஆய்வாளர் ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் 15, 20 நாட்களுக்குள்ளாக கொடுத்துவிட வேண்டுமென்ற ஆணையைப் பிறப்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 15 தினங்களுக்குள் என்று அந்த அளவுக்குள் முடிக்கவேண்டுமென்று அரசு ஆணையிட முடியாது. தாசில்தார் அல்லது டெபுடி தாசில்தார் அவர்களுக்கு இருக்கும் பற்பல பணிகளை மேற்கொண்டு வருகிறபோது இடையே இதைப் பார்க்கிற போது அதற்காக குறைந்த அளவு காலக்கெடுவை விதிப்பது முடியாத காரியம். கடன்பட்டவர்கள் சார்பிலே என்ன சொத்து இருக்கிறது என்று மனுக்கள் மூலமாகக் கேட்டு அதற்குப் பிறகு தான் அந்த விவரங்களைக் கொடுக்க முடியும். அந்த முறையில் தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நான் ஏற்கெனவே சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறேன். ப்ரீ லீகல் எய்ட் போர்டு—இலவச சட்ட ஆலோசனைக் குழு—வட்டந்தோறும் அந்தப் பணியை மேற்கொள்கிறது. குறிப்பாக ஏழைகள் கேட்கிறபோது அவர்கள் ஆலோசனை கூறி உதவியைச் செய்யவேண்டி பணிக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த 15 தினங்களாக அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே இந்தப் பிரச்சினைகள் தீரும் என்று அரசு நம்புகிறது.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, ஏழை எளியவர்கள் தாங்கள் அடகுக் கடைகளில் வைத்த பொருட்களைப் பெறுவதற்கு பறக்கும் படை என்ற ஸ்தாபனம் ஈடுபட்டு அந்தக் காரியங்களிலே தலையிட்டு நகைகளை சுலபமாகப் பெற்றுத்தருகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அந்த பறக்கும் படை அரசின் அமைப்பாக எங்கும் இல்லை.

வேலூர் மத்திய சிறைச்சாலையில் அச்சடிக்கும் பிரிவு, பைண்டிங் பிரிவுகளை ஏற்படுத்தும் திட்டம்

*** வினா எண் 411—திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் மத்திய சிறைச்சாலையில் சிறிய அச்சடிக்கும் தொழில் புஸ்தகம் நோட் பைண்டிங் செய்யும் தொழில் போன்ற சிறிய பிரிவுகளை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

1982 மார்ச் 8]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : வேலூர் மத்திய சிறையில் புத்தகம் பைண்டிங் செய்யும் தொழில் பிரிவு ஒன்று ஏற்கனவே உள்ளது. இச்சிறையில் சிறிய அச்சடிக்கும் தொழில் ஆரம்பிக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

(முற்பகல் 9-40)

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவரவர்களே, வேலூர் மத்திய சிறை மிகப்பெரிய சிறை. அங்கே பல தொழில்கள் இருந்தாலும் அச்சடிக்கும் தொழிலை ஆரம்பிப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். எதிர்க்கட்சிக்காரர்களெல்லாம் அடிக்கடி சென்று வரும் சிறை; நான் சென்றிருக்கிறேன். திரு. உமாநாத் அவர்கள் சென்று நீண்ட நாட்களாகி யிருக்கும் என்று கருதுகிறேன். அந்தச் சிறையை நல்லமுறையில் பயன்படுத்து வதற்கு இந்தத் தொழிலைத் துவக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்களுக்காக சிபார்சு செய்வதெல்லாம் நல்லதல்ல (சிரிப்பு)

திரு. ரா. உமாநாத் : என்னைச் சிறைக்குப்போகத் தூண்டிவிடுகிறார். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பார்வையாளராகப் போவதற்கு. (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பைண்டிங் தொழில் பிரிவு தவிர தையல் தொழில் பிரிவு, பூட்ஸ் உற்பத்தி செய்யும் பிரிவு. நெசவுத் தொழில் பிரிவு போன்ற பிற தொழில் பிரிவுகளும் அச்சிறையிலே இருக்கின்ற அச்சடிக்கும் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவது தேவை என்று முன்னர் நான்கூடக் கருதினேன் ; சொன்னேன்தான். ஆனால் அந்த அச்சடிக்கும் பிரிவின் மூலம் எத்தனை பேர்களுக்கு அங்கே பணி கிடைக்கும் ; பயிற்சிகளைப் பெற முடியும். பிறகு ரிஃபார்ம் ஆகி அவர்கள் வாழ்க்கையிலே செட்டில் ஆகும் பொழுது தக்க பலனை இது தருமா, இதைவிட நல்ல பல பணிகளில் அவர் களுக்குப் பயிற்சி தரலாமா என்று அரசு ஆய்ந்து வருகிறது. சில உத்தரவுகளை யிட்டிருக்கிறது. வேறு சில பிரிவுகளை அங்கே அமைக்க அரசு ஆய்ந்து வருகிது ; நடைமுறைப்படுத்தப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைதிகளின் மூலம் செய்யப்படும் பொருள்களிலிருந்து கிடைக்கின்ற வருமானம் கைதிகளுக்குக் கொடுக்கப்படுகிறதா ? ஒரு தொழிலில் தேர்ச்சியடைந்த கைதி விடுதலையாகும்பொழுது அந்தத் தொழிலில் அவருக்குத் தமிழக அரசே வேலை கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படிப் பயிற்சியிலே அங்கே ஈடுபட்டுத் தொழில்புரிகின்ற கைதிகளுக்கு முன்னர் கொடுக்கப்பட்டதைவிடத் தற்போது ஊதியம் சற்று அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அது போதிய ஊதியம் என்று சொல்ல மாட்டேன். போதிய ஊதியம் என்று சொல்ல முடியாது. அவர்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்று வெளியேறிய பிறகு அவர்கள் வாழ்வில் திருந்தி வருமானத்தோடு வாழ வேண்டுமென்பதற்காகக் கடன் உதவி தந்து, தாழ்த்தப்பட்ட மக்கள் போன்றவர்களாக இருந்தால் மானியமும் தந்து தொழில் அமைக்க அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

குளத்தூர் தொகுதியிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் கட்ட வழங்கப்பட்ட கடன்.

* வினா எண் 412.—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தொகுதியில் சென்ற ஆண்டு கிராமப்புற வீடுகட்டும் சொசைட்டி மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு எத்தனை வீடுகளுக்கு கடன் வழங்கப்பட்டது ?

(ஆ) எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தொகுதியில் 1980-81 கூட்டுறவு ஆண்டில் கிராமப்புற வீடு கட்டும் சங்கத்தின் மூலம் வீடு கட்ட 539 ஆதிதிராவிட மக்களுக்கு கடன் வழங்கப் பட்டது.

(ஆ) 393 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

திரு. த. மாரிமுத்து : தலைவரவர்களே, ஆதிதிராவிட மக்களில் பெரும்பாலோர் குடியிருந்து வந்த குடிசைகளை அகற்றிவிட்டு வேறு மனைக்கட்டு இல்லாததால் அதே இடங்களிலேயே புதிதாகக் கட்டும் வீடுகளை அமைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. தவணை முறையில் உரிய காலங்களில் வழங்குவதில் மிகவும் தாமதம் ஏற்படுகிறது. இந்தச் சிரமங்களைத் தவிர்த்து கடன் வழங்க ஆரம்பித்தவுடன் வீடுகள் கட்டக் கட்ட இரண்டாம், மூன்றாம் முறை தவணை முறைகள் உடனுக்குடன் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?